**தலைப்பு 419 – பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்றினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 05 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல்

அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

-------------------------------------------------------------------------

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு மீளாய்வாண்டில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தமையினால் முன்னைய ஆண்டிற்கு தொடர்புடையதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு காணப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------

### 1.6.1 முற்பண சீராக்கல் கணக்கு

---------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த காசு பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இற்கு ரூபா 48,064,517 ஆன மறை கட்டுநிதி மீதியொன்று காணப்படினும், அது இணக்கப்படுவதற்காக முற்பண சீராக்கல் கணக்கொன்று தாயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த இரராஜாங்க அமைச்சின் தலைப்பின் கீழ் 2020 ஆம் ஆண்டிற்காக வேறாக முற்பணம் திறைச்சேரியினால் பெற்றுக் கொடுக்காமையினால் முற்பண கணக்கொன்று தயாரிக்கப்படவில்லை. | அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிக்காட்டல் 06 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் ரூபா 1,810,407 ஆன மூலதன சொத்து கையகப்படுத்தப்பட்டிருப்பினும் அது நிதி நிலைமை கூற்றில் ஆதனம் பொறி மற்றும் உபகரணம் கீழ் மற்றும் ஆதனம் பொறி மற்றும் உபகரண தொகுதியின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | திசெம்பர் 31 இல் உள்ளவாரான பெறுமதிகளிற்கு தொடர்புடையதாக குறிப்புகள் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிக்காட்டல் இல 06 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.3 நிதிச் செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள |
| --- | --- | --- |
| திறைச்சேரி கணினி அச்சின் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களின் முற்பணம் பெறல் மற்றும் செலுத்தல் முறையாக ரூபா 382,221 மற்றும் 2,608,620 ஆயினும் நிதிச் செயலாற்றல் கூற்றில் முற்பணம் பெறல் மற்றும் செலுத்தல் முறையாக ரூபா 380,683 மற்றும் ரூபா 763,957 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 1,538 மற்றும் ரூபா 1,844,663 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | அவ் வேறுபாட்டிற்கு காரணம் தொடர்புடைய தவறு சரிசெய்யப்பட்ட செலவு மற்றும் வரவு குறிப்புக்களின் பெறுமதியாகும். | அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிக்காட்டல் இல 06 இன் பிரகாரம் நிதிக் செயலாற்றல் கூற்று திறைச்சேரியின் கணினி அச்சின் பிரகாரம் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.4 காசுப் பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| அரச கணக்குகள் திணைக்களத்தின் வழிக்காட்டல் இல 06 இன் பிரகாம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக காசுப் பாய்ச்சல் கூற்றொன்று (ஏசீஏ –(சீ) மாதிரி) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இராஜாங்க அமைச்சு தலைப்பின் கீழ் காசுப் பாய்ச்சல் கூற்றொன்று தயாரிப்பதற்காக இராஜாங்க அமைச்சுக்கு தொடர்புடையதாக முற்பணம் பெறல் செலுத்தல் 2020 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிக்காட்டல் இல 06 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.5 ஒருங்கிணைந்த பரீட்சை மீதி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக இராஜாங்க அமைச்சு ஒருங்கிணைந்த பரீட்சை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிக்காட்டல் இல 06 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.6 கட்டுநிதி மீதி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அமைச்சிற்காக 2020 செப்தெம்பர் 22 ஆம் திகதி வங்கி கணக்கொன்று திறக்கப்பட்டிருப்பினும் கட்டுநிதி கணக்கு திறக்கப்பட்டிருந்தது 2020 திசெம்பர் 10 ஆம் திகதியாகும். கட்டுநிதி கணக்கு திறத்தல் தாமதமாகியதன் காரணத்தினால் 2020 | அமைச்சிற்காக வங்கி கணக்கு 2020 செப்தெம்பர் 22 ஆம் திகதி திறக்கப்பட்டிருப்பினும் வங்கியினால் அது தொடர்பில் 2020 திசெம்பர் 03 ஆம் திகதிய கடிதத்தின் ஊடாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அக் கடிதம் நாட்டில் காணப்பட்ட நிலைமையின் | 2020 நவம்பர் 20 ஆம் திகதிய 06/2020 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் 2020 செப்தெம்பர் 01 ஆம் திகதி தொடக்கம் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு தொடர்புடையதாக |

| | | | |
|---|---|---|---|
| | செப்தெம்பர் 01 ஆம் திகதி தொடக்கம் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலத்திற்கு தொடர்படையதாக இராஜாங்க அமைச்சினால் வேறாக கணக்கு வைத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காரணத்தினால் எங்களிடம் கிடைக்கப்பெற்றது 2021 சனவரி 15 ஆம் திகதியாகும்.<br><br>எவ்வாறாயினும் தொலைப்பேசியினூடாக வங்கியுடன் தொடர்பு கொண்டு தொடர்புடைய தகவல்கள் திறைச்சேரியிடம் சமர்ப்பிக்கப்பட்டு கட்டுநிதி கணக்கு 2020 திசெம்பர் 10 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு இயலுமாயிருந்தது. எனினும் காசோலைப் புத்தகம் அச்சிட்டு எதிர்கால கணக்கு நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு 2020 ஆம் ஆண்டினுள் போதுமான காலமொன்று காணப்படவில்லை. | இராஜாங்க அமைச்சினால் வேறாக கணக்கு வைத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும். |
| (ஆ) | வெளிநாட்டு அமைச்சிற்காக தயாரிக்கப்பட்டிருந்த ஒருங்கிணைந்த பரீட்சை மீதி இராஜாங்க அமைச்சிற்கு சொந்தமான கூட்டுத்தொகை ரூபா 50,329,524 ஆன செலவு குறிப்புக்கள் காணப்படினும் அதன் வரவு குறிப்புக்களின் கூட்டுததொகை ரூபா 423,421 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் மறை கட்டுநிதி மீதி ரூபா 49,906,103 ஆக காணப்படினும் முன்வைக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் மறை கட்டுநிதி மீதி 48,064,517 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. | இக் கட்டுநிதி வேறுப்பாட்டிற்கு அரசாங்க உத்தியோகத்தர்களின் கணக்குகளுக்கு தொடர்புடையதாக ஆரம்ப செலவு மீதி கையகப்படுத்தல் காரணமாகும். | அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 06 ஆம் இலக்க வழிக்காட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.6.7 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 நவம்பர் 30 ஆம் திகதிய 06/2020 ஆம் இலக்க வரவு செலவு சுற்றறிக்கையின் பிரகாரம் முன் காணப்பட்ட செலவு விடய தகவலின் கீழ் அறிக்கையிடப்பட்டுள்ள செலவுகள் பேரேட்டு குறிப்புக்கள் ஊடாக தொடர்புடைய அமைச்சுக்கு மாற்றப்பட் வேண்டியிருப்பினும் ரூபா 33,219,960 ஆன செலவினம் மாற்றப்படுவதற்கு தொடர்படைய பேரேட்டு குறிப்புக்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டில் மாற்றப்பட்ட செலவு விடய தகவலிற்கு தொடர்புடைய பேரேட்டு குறிப்புகள் இதனுடன் முன்வைக்கின்றேன். | குறித்த பெறுமதிக்கு தொடர்புடைய பேரேட்டு குறிப்புக்கள் முன்வைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் கையகப்படுத்திக் கொள்ளப்பட்ட ரூபா 1,810,407 ஆன நிதியல்லாச் சொத்திற்கான பேரேட்டு குறிப்புக்கள் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிடமிருந்து மாற்றப்பட்ட நிதியல்லாச் சொத்து மற்றும் வைப்பு மீதி மாற்றப்பட்டமைக்கு தொடர்புடைய பேரேட்டு குறிப்புக்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. | ஏனைய பெறுமதிகள் மாற்றப்படல் 2020 ஆம் ஆண்டிற்கு தொடர்புடைய திறைச்சேரி கணினி அச்சு பரீட்சித்த பின்னர் கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதியல்லாச் சொத்துக்கள் மற்றும் வைப்புக்கள் மீதி மாற்றப்பட்டமைக்கு தொடர்புடைய பேரேட்டு குறிப்புகள் முன்வைக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீனாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 50 (II) பிரகாரம் மதிப்பீடு முடியுமானவரையில் முழுமையாக சரியாக தயாரித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமையாகும். எனினும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமை காரணத்தினால் நிதிப் பிரமாணம் 66/69 இன் கீழ் மாற்றல் ஊடாக நிதியேற்பாடு அதிகரித்துக்கொண்ட 03 செலவு விடயங்களும் உள்ளடங்களாக 25 செலவு விடயங்களின் ஒதுக்கப்பட்ட பணத்தில் 55 சதவீதம் தொடக்கம் 100 சதவீத வீச்சில் மொத்த பெறுமதி ரூபா 32,670,128 ஆன நிதியேற்பாடு குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | 2020 ஆம் நிதி ஆண்டிற்கு தொடர்படையதாக 2019 ஆம் ஆண்டிற்கு வரவு செலவு தயாரித்த சந்தர்ப்பத்தில் திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்படுவதற்கு நாட்டினுள் காணப்பட்ட மோசமான நிலைமையின் காரணத்தினால் செலவின கட்டுப்பாட்டிற்கான அரசினால் அவ்வப்போது வெளியிடப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு நேர்ந்தமையினால் இந்த மிகுதி ஏற்பட்டிருந்தது. | மதிப்பீடு இயலுமான வரையில் முழுமையாக சரியாக தயாரித்தல் வேண்டும். |

### 2.2 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக சான்றுப்படுத்தப்பட வேண்டியிருப்பினும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| இராஜாங்க அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கப்பூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு | கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 |

முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச்செல்லப்படுகின்றமை தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்தப்பட வேண்டியதுடன் அம் முறைமையின் பயனுறுதி தொடர்பில் காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை பயனுள்ளதாக பேணிச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதெனவும், அவ் மீளாய்வுகள் எழுத்துமூலமாக மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட வேண்டியபோதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் அறிக்கை கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை.

ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.